உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.





கோவிற்பட்டியென்று பெயர் விளங்குகின்ற திருமங்கைநகர்ச்

சொன்னமலைக் கதிரேசன்மீது பதிகமும், மாலையும்,

திருப்புகழும், காவடிச்சிந்தும் ஆகிய

# தோத்திரப்பாமாலை.

இவை

சாத்தூர்த்தாலூகா புதுச்சூரன்குடி வித்துவானும் விருதுநகர்

க்ஷத்திரிய வித்தியாசாலைத் தமிழாசிரியருமான

மதுரகவி மகா-ா-ா-ஸ்ரீ

**S. சுப்பிரமணியக்கவிராயரவர்களால்**

இயற்றப்பெற்று,

---

ஷை திருமங்கை நகர் ஸ்ரீமான்

. இராமசாமி செட்டியாரவர்களால்

பதிப்பிக்கப்பெற்றன.

---

(ரிஜிஸ்டர் காபிரைட்).

இதன் விலை) 1925. (அணா 8.

மதுராம்பிகா பிரஸ் மேலவாசல் மதுரை;—25,

THE MADURA TAMIL

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

கோவிற்பட்டி யென்று பெயர் விளங்குகின்ற திருமங்கைமாநகர்ச்

சொன்னமலைக் கதிரேசன்மீது பதிகமும், மாலையும்,

திருப்புகழும், காவடிச்சிந்தும் ஆகிய

# தோத்திரப்பாமாலை.

இவை

சாத்தூர்த்தாலூகா புதுச்சூரன்குடி வித்துவானும் விருதுநகர்

க்ஷத்திரிய வித்தியாசாலைத் தமிழாசிரியருமான

மதுரகவி மகா-ா-ா-ஸ்ரீ

## S. சுப்பிரமணியக்கவிராயரவர்களால்

இயற்றப்பெற்று,

ஷை திருமங்கை நகர் ஸ்ரீமான்.

அ. சி. இராமசாமி செட்டியாரவர்களால்

மதுரை மேலவாசல்,

மதுராம்பிகா பிரஸில் அச்சிடலாயிற்று.

இதன் விலை] 1925. [அணு 8.

THE MADURA TAMILSANGAM

உ

சத்திவடிவேலுற்றதுணை.

# சாற்றுக்கவிகள்.

---

ஓம்.

விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலை ஹெட்மாஸ்டர்

B. A. L. T. பிரம்மஸ்ரீ

K. நாராயணசாமி அய்யங்காரவர்கள் இயற்றிய

நேரிசை வெண்பா.

தண்டமிழா சிரியன் றான்சுப் பிரமணியன்
கொண்டலென விந்தகவி கூறவல்லோன்—அண்டர்களின்
துன்பமறைத் தீர்த்தகுகன் தோத்திரப்பா மாலைசொற்றுன்
இன்பரச மென்றுமுற வே.

---

விருதுமாநகரம் ஸ்ரீலஸ்ரீ அருணாசலசுவாமிகளின் பிரதம சீடராகிய

ஸ்ரீமாந். எ. ச. கயிலாசஞ்செட்டியாரவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

துதித்தே விதிமால் சொன்னமலைச் சுவாமி சத்தி வடிவேலை
மதித்தே வாழ வுயிர்க்கருண்மால் வடிவா பிராம சாமியுன்னை
விதிப்பார் சுப்பிர மணியனென்றே மெய்யே பதிகந் தார்ஞானம்
பதித்தா ரின்பே திருப்புகழாய்ப் பஞ்ச ரத்னஞ் சிவமணியே.

---

திரிசிரபுரம் பிஷப்ஹீபர் கல்லூரித் தமிழ்பண்டிதர் ஸ்ரீ மாந்

வித்வான். அ. சுந்தரநாதபிள்ளை யவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

செந்தமிழின் மணஞ்சிறக்கச் சொன்னமலைத் திருமுருகன் செய்பதா
முந்துவளச் சூரனகர்ச் சுப்பிரமணியக் கவிஞன் முன்னுத்தேடிச் [சிறு
சிந்துடனே பதிகமிரட் மாலையொடு வண்ணநனி சிறக்கப் பாடிச்
சிந்துலவு தாணியருக் கீந்துவந்தா னிவன்பெருமை செப்பற் பாற்றே.

---

மதுரை வித்துவான்,

## த. குப்புசாமிநாயுடவர்களியற்றிய

வெண்பா.

சத்திவடி வேலவன்மேற் சாற்றும்பா மாலையைந்தி
ரத்தினத்தி ருப்புகழ்மா நற்பதிகம்—முத்தமிழின்
சொற்கண்டாய் வாழ்சுப் பிரமணியத் தோன்றலென்பான்
கற்கண்டாய் விண்ட கவி.

---

கோவிற்பட்டி ஸ்ரீமாந் க. செ.

## செண்பகானந்தமுத்துப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகமெலாம்போற்றுமுயர் திருமங்கைப் பொன்மலையி
னும்பர்பூத்தே
யிலகுகதிர் வடிவேல னிணையடிக்கே பாமாலை
யியற்றி னானற்
புலவர்புக ழுயர்சுப்பிர மணியவல்லோ னுரைத்தல்கண்டு
புனிதர் போற்றும்
மலயமுனி மலைப்புடைய னாகினனென் றூற்பெருமை
வழுத்தற் பாற்றே.

---

எட்டயபுரம் சமஸ்தானம் நடுவிற்பட்டி ஸ்ரீமாந்

## ந. மா. மாணிக்கஞ்செட்டியாரவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திருமங்கைக் கனகமலைக் கதிர்காம வேலவன்மேற்
சிந்தித் தேற்று
மொருதனிப்பா மாலைதனை யுரைத்தனன்சுப் பிரமணிய
னுலகர் போற்றும்
பெருமுனிநல் லகத்திய னும் புகழ்ந்துதுதித் திடவெவரும்
பேசி வாழ்த்தக்
குருவுருவா யினனென்று லியாவரோ யிவன்பெருமை
கூற வல்லார்.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# பாடினோர் வரலாறு.

கங்கையும் பிறையுங்கலந்த செஞ்சடிலன், மங்கையோர்பாகன் மானிடவடிவம் பெற்றுச் செங்கோல் புரிந்திடச் செழுந்தவமியற்றிய மண்டலந் தண்டமிழ் வழுதிநன்னாட்டிற்றிலகமா யமைந்துசாத்தூர்த் தாலூகா மதுரை ஸ்ரீமீனாட்சிசுந்தரேஸ்வரர்தேவஸ்தானமாய்ப் பற்பலவளனும் நிறைந்த புதுச்சூரனகரத்தில் யோகிகுலதீபமா யவதரித்த வ. சீ. மீ. சக்கணபண்டாரமவர்களுக்குப் பாரியாய் (தற்காத்துத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற,சாற்காத்துச்சோர் விலாள்பெண்) என்றபடி கற்புநிலைமை வாய்ந்த செல்லாயம்மாளவர்களின் உதரத்திற் செனித்தவர். (ஈதலிசைபட வாழ்த லதுவல்ல, தூதிய மில்லை யுயிர்க்கு) என்ற மொழிக்கிலக்கான ஆன்றோர்களால் மதுரகவிச் சுப்பிரமணியக் கவிராயரென்று புகழ்பெற்றவர். இவர் இளவயதிலேயே (ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தின், னெய்துவரெய்தாப்பழி) என்பதைக் கடைப்பிடித்து நல்லொழுக்கம் அமைந்து தம் சிறிய தந்தையராகிய, மீ. சீனி உபாத்தியாயரவர்களின் பக்கல் அக்ஷராப்பியாசமுற்று (எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்) என்னும் ஔவை மூதாட்டியார் திருவாக்கின்படி இலக்கிய இலக்கணங்களைக் கற்றுப் பாக்களியற்றுவதிலும், இதிகாச புராணங்களைக் கேட்போர் வியப்புறும்படி இன்னிசையுடன் பிரசங்கஞ் செய்வதிலும், வல்லுநர் (கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன், நற்றாடொழா அரெனின்) என்ற மூதுரையின்பிரகாரம் மயிலேறும் பெருமான் மலரடிவந்தித் தவன்றிருவருட் பிரசாதம் அடைந்தவர். ஆங்கில கலாசாலைகளின் உயர்தர மாணவர்கள் தெள்ளிதினறியப் போதிக்கும் ஆசிரியத் திறமைவாய்ந்தவர். சாத்தூர்க் கஸ்பாவில் (வாணிகஞ்செய்வார்க்கு வாணிகம் பேணிப்பிறவுந்தம் போற்செயின்) என்ற பேருரையை நிலைநிறுத்திப் பஞ்சுவர்த்தகம்புரிந்து, (கேடில் விழுச்செல்வங் கல்வியொருவற்கு, மாடல்ல மற்றையவை) என்றும், (கற்கக்கசடறக் கற்பவைகற்றபி, னிற்கவதற்குத்தக) என்றும்பெரியார் பேணிய பேருரைகளைப் பெட்புடன்கொண்டு (நல்லாறெனினுங்

கொளறீது மேலுலக, மில்லெனினுமீதலேநன்று.) (பயன்மரமுள் ளூர்ப்பழுத்தற்றாற்செல்வம். நயனுடையான்கட்படின்) என்றபெருஞ் சொற்களைக் கண்ணுற்று யாவர்க்கும் பேருபகாரம் புரிபவரும், ஆயிர வைசியகுலகுரு ஸ்ரீ தர்ம சிவாசாரிய சுவாமியவர்களின் பாதசேகரரு மான ஸ்ரீமாந். எ. ச. சங்கரலிங்கஞ்செட்டியாரவர்களுடன் பன்னாட் பழகி அவர்களன்பாலும், பொருட்சகாயத்தாலும், நன்னிலைமையெய் தியவர். இன்னவர் கோவிற்பட்டி யென்றுபெயர்விளங்குகின்ற திரு மங்கைமாநகரத்தின் தென்மேற்கிலமைந்துள்ள சொர்ணமலைக் கதி ரேசன் மீது பதிகமும், மாலையும், திருப்புகழும், காவடிச்சிந்தும், பக்திரசத்துடனியற்றி இங்கிலவுலகத் துலவுமெய்யடியவர்களின் உள் ளங்குளிரச்செய்தனர். இந்நன்றிக் கென்ன கைம்மா றியற்றுவோம் இவர் நலம் பல்லூழிகாலம் நீடுவாழ்க. சுபம். சுபம். சுபம்.

க்ஷத்திரியவித்தியாசாலை,<br>விருதுநகர்.<br>17—3—25.

பி. சுந்தரராஜ ஐய்யங்கார், B. A.,<br>சரித்திர ஆசிரியர்.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# பார்திவித்தோர் வரலாறு.

புண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்தில் வடக்கு திருவேங்கடமலையும், தெற்கு கன்னியாகுமரியும், கிழக்கு கீழ்கடலும், மேற்கு குடகநாடு மாகிய நான்கு எல்லைக்குட்பட்டுத் தண்டமிழ் வழங்கப்பெறும் என்னாட்டுந் தென்னாட்டில் சொன்னாட்டும் பொன்னாட்டும் ஒப்புவமை யில்லா வழங்குலவி தருமங்கையாளருறையுந் திருமங்கை மா நகரத்தின்கண்(பற்றுகபற்றற்றான் பற்றினை யப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு) என்றபடி பந்தபாச மொழிந்து முற்றத்துறந்த ஆயிர வைசிய குலகுரு ஸ்ரீ தர்ம சிவாசாரிய சுவாமி யவர்களின் பாதசேகரரும் (தோன்றிற் புகழொடுதோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று) என்ற முதுமொழிக் கிணங்கச் சற்கீர்த்தி பெற்றவருமான ஸ்ரீமாந். அ. சிற்றம்பலச் செட்டியாரவர்களுக்கு நாயகியாய் (தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்பெய்யெனப்பெய்யு மழை)எனப்பெரும்புலவர் பேருரையை நிலைநாட்டவந்த கற்புக்கரசியாயமைந்துள்ள இலக்குமி யம்மாளவர்களின் வயிற்றிற்றோன்றி(கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்)என்பதுணர்ந்து பன்னூலைக் கற்றுப்பின்னர் (தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான் மனக்கவலை மாற்றலரிது)என்றவாக்கியத்தைத் தெளிந்து சாக்ஷாத் பரம கருணையைக் கடவுளின் றிருவடிக்கன்பு பூண்டொழுகிவரும் ஸ்ரீமாந் அ சி, இராமசாமிச் செட்டியாரவர்கள், உல்கத்தில் வாசனையையுடைய கடவுள் முருகப்பெருமானென்றும், அப்பெயர் காரணப்பெயரென்றும், அப்பெருமானுக்கு எற்பட்டுள்ள எனைய நாமங்களியாவுங் காரணப்பெயர்களே என்றும் முற்காலத்துத் தமிழ்ப்புலமைச் சிகாமணியாகிய நக்கீரர் அருளிசெய்த நூல்களைக் கண்ணுற்றாராய்ந்தவர். இச்சீருடையாரை ஷை திருமங்கைமா நகரத்துறையும் ஸ்ரீமாந். ஆறுமுகம் பிள்ளையவர்களின் அருந்தவப் புதல்வராகிய நல்லசிவன் பிள்ளையவர்கள் தாம் இருபது வருஷமாயிருந்துவந்த அரிய சஷ்டிவிரதத்தை முடிப்பான் கருதி வேண்ட அதற்கிணங்கி யவர்களுடனும் தன்னகத்தொத்த நட்பினை

ராயும் மிகுந்த சிவபத்தராயுமுள்ள ஸ்ரீமாந் பி. சிதம்பரம்பிள்ளையவர்களுடனும் மகாமான்மியத் தலமதாகிய கதிர்காமத்திற்குச்சென்று ஆங்கெழுந்தருளியுள்ள கதிரேசப்பெருமான் செம்பொற் கமலச்சிறடியைப் பலகாலும் வந்தித் தவணுற்றனொன்று ஓரிரவில் அப்பகவான் திருவுளமுவந்தளிந்த சொற்பனத்துத்தரவைச் சிரமேற்கொண்டு தமது தலத்திற்குவந்து கதிரேசப்பெருமான் திருவருளை யாவரும் அடைதற்பொருட்டு தகுந்த சர்வ சமூகத்தினருடனும் தம்மரபினருடனு மளவளாய் அவர்களுடன் அத்தலத்திற்கு நிருதித்திசையில் அமைந்துள்ள தங்கமலையின் சிகரத்தில் தம் பொதுப்பண்டிலிருந்து திருவாலயங் கட்டுவித்து அதனுட் சத்திவடிவேற் சொரூபமாய் கதிரேசப்பெருமானை யெழுந்தருளச்செய்வித்து நித்தியநைமித்திய அபிடேக உத்ஸவங்கள் முதலியன நடாத்துவிக்கின்றனர். இப்புண்ணிய சீலர் அண்ணியவடியர் கண்ணியமுறத் தன்னருள்புரியும் நுண்ணிய கூரயிற் பெருமானுக்குப் பூமாலை சூட்டுவித்துப் பொங்கு மகிழ்வெய்தி பாமாலை புனைவிக்கப் பண்புடனெம்மை யழைத்துப் பதிகமும், மாலையும், திருப்புகழும், காவடிச்சிந்தும் இயற்றல்வேண்டுமெனக்கூறி அங்ஙனம் யானியற்றிவருங் காலத்தினிடையிடையே வேண்டும் பொருளுதவி புரிந்து நாளது இரத்தாட்சிஷு தைமீ 25௳ சுக்கிரவாரமும் புனர்பூச நட்சத்திரமுங்கூடிய சுபயோக சுபகரண சுபமுகூர்த்தத்தில் கதிரேசப்பெருமான் சந்நிதானத்திற் கற்றவர்குழாஞ்சூழ அரங்கேற்றுவித்து அச்சிற் பதிப்பித்தனர். இப்பணியை யெனக்கு பேரன்புட்னுதவிய திருவாளர் ஷை அ. சி. இராமசாமி செட்டியாரவர்களுக்கும் அவர்கள் மரபினரவர்களுக்கும் சிறப்புற்றோங்கிய சர்வ சமூகத்தினரவர்களுக்கும் யான் நன்றி கூறுவதுடன் அவர்கள் யாவர்களுக்கும் எந்நலமும் வளர்ந்தோங்கும்படி கதிரேசப் பெருமான் திருவருள் புரிவாராக.

சுபம். சுபம். சுபம்.

க்ஷத்திரியவித்தியாசாலை,
விருதுநகர்.


இங்ஙனம்,
S. சுப்பிரமணியக்கவிராயர்,
தலைமைத்தமிழாசிரியர்.



உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.



# சென்னகிரிச்

# சத்திவடிவேலவன்பதிகம்.

கணபதி துணை.

நேரிசை வெண்பா.

திருமங்கைச் சொன்னகிரிச் செய்பகதிர் காமன்
றருமங்கை கூடவந்த சாமி—திருமங்கை
யுற்றானை வாழ்த்துநெஞ்சே யோதுதக்தை பாற்கனியைப்
பெற்றானை மாமுகனைப் பேசு.

சீர்பெருகு மாமணிபொன் மீறிவரு கங்கையுங்
திகழுமிள மதியு முற்ற
செஞ்சடா டவிமருவு மஞ்சுமா முகனரசு
செய்துவாழ் கயிலை மலையிற்

பேர்பெருகு தேவர்முனி வோர்கள்முத லானவர்கள்
பெருமிதமி லாது சென்று
பெற்றவா கனவெமைப் பெற்றவா வுற்றவா
பெரியவா வுரியவா வென்
றூர்பெருகு வார்கள்புரி தீமைகளை நீக்கெனச்
சொல்லவறு பொறிக ளுதவிற்
றோன்றிநீர்க் கங்கையில் வீழ்ந்துசர வணமுறத்
தாயுவுமை யாளெ டுப்பச்
சார்பெருகு நீபவருள் தருகதிரு மங்கைநகர்
தங்குமொரளிர் சொன்ன கிரிவாழ்
சத்தியுமை பாலவள முற்றகதிர் காமசிவ
சத்திவடி வேல மணியே. (1)

வண்டுகுடி கொண்டுவளர் செங்கமல மீதுதினம்
வாழ்பிரம னுக்கு முன்னாள்
வந்தகரு வந்தனைப் போக்கிடப் பிரணவ
மந்திரப் பொருளை நம்முற்
கண்டுமொழி கென்னவுரை யாதுதேங் கிடக்கொடிய
கடுஞ்சிறையி லிட்ட குகனே
கந்தனே யாறுமுக மைந்தனே பனிரண்டு
கையனே துய்யனே நற்
றொண்டுபுரி வார்கடுயர் தீர்த்தருளு மெய்யனே
சுருணைகல் யரண பரனே
சுத்தனே யடியனின தடியையே மறவாது
தோத்திரஞ் செய்ய வருள்வாய்
தண்டுதலி லாதுநிதி துன்றுதிரு மங்கைநகர்
தங்குமொரளிர் சொன்ன கிரிவாழ்
சத்தியுமை யாலவள முற்றகதிர் காமசிவ
சத்திவடி வேல மணியே. (2)

வந்தனந் தந்தியா னின்பதந் தினமுமே
மன்னகங் கண்டு போற்றும்

மார்க்கமீ யுணராத தன்மையோ வென்மீது
வஞ்சமோ சிறிது போதுன்
சிந்தனை செலுத்திநற் கலியெனைச் சூழுமோ
தேவனே யன்பு வைத்துச்
சிறியனே னென்றுமகி ழெய்தநவ நிதியமுஞ்
செப்புமக வொப்பு கிளையுந்
தந்துமேற் றீர்க்காயு ளும்பெருஞ் செல்வமுஞ்
சற்சனர்கள் சேர்க்கை யுறவுந்
தாமதமி லாமலிவ் வேளையே தந்தருள்வை
சதுர்மறைகள் தேடு சமுகா
சந்ததமு முத்தமிழ் விளங்குதிரு மங்கைநகர்
தங்குமொளிர் சொன்ன கிரிவாழ்
சத்தியுமை பாலவள முற்றகதிர் காமசிவ
சத்திவடி வேல மணியே. (3)

முந்தைநா ளந்தணன் றன்குலத் தாசார
முற்றிலுங் கெட்டு வேடம்
மூடரோ டுறவாடி பாதகப் பேழையாய்
மோதுவன மேகி யாங்கு
வந்திடும் பேர்களைக் கொன்றுமவ ருடைமையை
வௌவியுற வரச னாலே
மற்றுமொரு தேயமதி லேகியதி கீழ்த்தொழிலை
மாறுது செய்து புலையன்
தந்தவொரு மாதுசம் பந்தமுற் றவனினது
தலைமதில் வந்த ததனாற்
சாமிநீ நற்பதவி தந்தருள வில்லையோ
தமியனேற் கருள்செ யையா
சந்தனச் சோலைபல சார்ந்ததிரு மங்கைநகர்
தங்குமொளிர் சொன்ன கிரிவாழ்
சத்தியுமை பாலவள முற்றகதிர் காமசிவ
சத்திவடி வேல மணியே. (4)

சாமளசொ ரூபற்கு மருக திரு மங்கைநகர்
தங்குமொளிர் சொன்ன கிரிவாழ்
சத்தியுமை பாலவள முற்றகதிர் காமசிவ
சத்திவடி வேல மணியே. (8)

தேடுபொரு ளுலகெலாந் தன்னதா யன்பர்தஞ்
சிந்தையே கோவி லாகச்
செல்கின்ற மாதவ னாரணன் கேசவன்
சீதர னென்ற பெயர்கள்
நீடுலகி லுரையாது கடவுள்தா னென்னவே
நிச்சயித் துற்ற சனகன்
நெஞ்சகங் கண்டுநர சிங்கமென வந்தருளு
நீண்டமால் மருக வுலகில்
வாடுபயிர் வாழமழை பொழிவதைப் போன்றடியன்
வாட்டமது தீர நினது
மாகருணை வைத்தருள்செய் யோகபர மானந்த
மவுனநிட் களசொ ரூபா
சாடுமொளி மாடவிண் டாவுதிரு மங்கைநகர்
தங்குமொளிர் சொன்ன கிரிவாழ்
சத்தியுமை பாலவள முற்றகதிர் காமசிவ
சத்திவடி வேல மணியே. (9)

வெய்யமன மாதர்புரி தீமையர்கள் சூதுநிறை
மேனியர்க ளம்பை யொத்த
விழியிலே மொழியிலே நடையிலே யிடையிலே
வீச்சிலே பூச்சி லேசொற்
பொய்யிலே கையிலே நிலையிலே கலையிலே
பூணிலே வா ணுத லிலே
பூமணக் குழலிலே நாடொறுந் தமியனே
புந்திதனை நுழைய விட்டு
வையவே செய்தவகை யென்கோலே வீதிகிலே
னுதனே மனது வந்து

நல்லவர்கள் சொல்லுமொழி யல்லறை வினவிமெய்
நாடவருள் புரிவை கண்டாய்
தையலர்கள் கற்புநிலை நின்றதிரு மங்கைநகர்
தங்குமொளிர் சொன்ன கிரிவாழ்
சத்தியுமை பாலவள முற்றகதிர் காமசிவ
சத்திவடி வேல மணியே. (10)

## வாழி.

### நேரிசை வெண்பா.

வாழிதிரு மங்கைநகர் வாழிவடி வேன்முருகன்
வாழியொளிர் சொன்னகிரி வாழிதமிழ்—வாழியின்பப்
பத்திமையார் வாழியிந்தப் பார்வாழி சீர்வாழி
யெத்தினமும் வாழிநல மே.


சுபம். சுபம். சுபம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

வேலு மயிலுந்துணை.



## சொன்னகிரிச்

# சத்திவடிவேலவன் மாலை.

### கணபதி துதி.

திங்கள்மணக் கொன்றைச் செஞ்சடிலன் பங்கில்வளர்
மங்கையருள் பெற்றதிரு மங்கைநகர்ச் சொன்னகிரி
யங்கைவடி வேலவனுக் கன்புடன்பா மாலைசொலக்
கங்கையணி சென்னிக் கணபதியே காப்பாமே. ❋

கள்ளமரும் பூங்கூந்தற் காரிகையார் மையலினால்
உள்ளமெலி யாமனின்மே லோங்குதுதி யோங்கவருள்
தெள்ளமுதம் போலுமொழித் தெய்வானை வள்ளியங்கா
தள்ளரிய சொன்னகிரிச் சத்திவடி வேலவனே, 1

போற்றிவந்த தேவரையாள் புண்ணியனே யென்கவியை
யேற்றுநலந் தந்தருள விப்பொழுதே வந்தருள்வாய்
காற்றின்மக னுவிலங்கைக் கட்டறுத்து வெற்றிகொண்ட
சாற்றுமரி மால்மருகா சத்திவடி வேலவனே. 2

அம்புவியிற் பாமரரை யல்லும்பக லும்நச்சிக்
கொம்புநறுந் தேனெனப்பாக் கூறுமனு டோறுஞ்
செம்புநித நின்னடிக்குச் செந்தமிழ்ப்பாப் பாடவருட்
சம்புதரும் பாலா சத்திவடி வேலவனே. 3

பந்தவினை யாவுநின்றாட் பற்றியவர்ச் சேராதென்
றெந்தமறை யும்புகல்வ தெண்ணியுன்னை நம்பியுற்றேன்
கந்தமுரு காகுமரா கைவிடா தென்றனையாள்
சந்தமிகுஞ் சொன்னகிரிச் சத்திவடி வேலவனே. 4

கூர்ந்தமதி மாமுனிவர் கொண்டாடுங் காங்கையனே
நேர்ந்தமனத் துன்பமெல்லாம் நீதீர்க்க வேண்டுமையா
ஆர்ந்தகதிர் காமமுற்ற வையாவிப் பூவில்வளஞ்
சார்ந்ததிரு மங்கைநகர்ச் சத்திவடி வேலவனே. 5

ஐயோ வெனக்குவிப ரந்தெரிந்த நாண்முதலாப்
பொய்யோநின் பேர்மொழிதல் பூவைவள்ளி பங்காளா
துய்யோ யெனையாண்டாற் சொல்லுவரோ குற்றநின்னைச்
சையோக மாமுதலே சத்திவடி வேலவனே. 6

ஒப்பியநற் கீரனுக்கன் றோங்கு மிலக்கணநூற்
செப்பியநன் மாமுனிவன் றேசிகா சித்தம்வைத்துத்
திப்பியஞ்சேர் சொன்னகிரிச் சேவற் கொடியோனே
தப்பிதமெல் லாம்பொறுத்தாள் சத்திவடி வேலவனே. 7

வள்ளிமுனந் தெள்ளுதினை மாவையுண்ட வல்லவனே
புள்ளிமயி லேறிவரும் புண்ணியனே பூவிலுள்ளார்
எள்ளிநிதம் பேசநிற்கு மேதிலரோ டென்றனையுந்
தள்ளிவிடா தாண்டருள்வாய் சத்திவடி வேலவனே. 8

திக்கரையு மேவல்கொண்ட செம்மையில்லாச் சூரர்களைக்
கொக்கரித்து நின்றகுணக் குன்றே யெனைக்காப்பாய்
இக்கவையே மைத்துனனென் றிப்புவியோர் செப்புமுறைச்
சக்கரையே முக்கனியே சத்திவடி வேலவனே. 9

பார்த்தருள்வா யென்முகத்தைப் பார்த்துமனத் துன்பமெல்லாந்
தீர்த்தருள்வாய் கல்விநலந் தீரமிவை யாவுமென்பாற்
சேர்த்தருள்வா யாறுமுகத் தேவேசெம் பொற்கடப்பத்
தார்ப்பொலியு மம்புயத்துச் சத்திவடி வேலவனே. 10

செட்டியே காற்கோடிச் செம்பொ னெனக்களித்தால்
வட்டியொரு மூன்றுதர வாங்கி மகிழாயோ
அட்டியில்லா மாமறையோ ராதிசைவர் கொண்டாடச்
சட்டியுற்ற கொக்கைவென்ற சத்திவடி வேலவனே. 11

நாரை கரிக்குருவி நன்னெறியிற் செல்லவைத்தான்
பேரை யுயர்த்தவந்த பிள்ளைநீ யாயிலுன்றன்
சீரைப் பகர்வோர்க்குச் செப்புநலந் தாகடப்பத்
தாரை மருவுபுயச் சத்திவடி வேலவனே. 12

பண்டையொரு மாமுனிவன் பாதகமெல் லாந்தீர்த்தாட்
கொண்டதின்றன் றந்தை குணத்தைநீ கொண்டருள்வாய்
வண்டனிகர் வாள்விழியாள் வள்ளிமண வாளாபொற்
றண்டை யணிபாதா சத்திவடி வேலவனே. 13

உன்னைநம்பி யானிருக்க வுன்பாட்டி னீயிருந்தா
லென்னைப் புரப்பவர்க ளிப்புவியில் யாவர்சொல்லாய்
பின்னை வளர்மார்பன் பெருமாள் மருகோனே
தன்னையடைந் தோர்க்காக்குஞ் சத்திவடி வேலவனே. 14

மங்களங்கள் பெற்றதிரு மங்கை நகர்க்கரசே
தங்கமலை பானுதித்துத் தங்கமலை வாழ்முதலே
அங்கமுறு நோவகற்றி யைம்புலன்கள் செய்யுமகா
சங்கடந்தீர்த் தாண்டருள்வாய் சத்திவடி வேலவனே. 15

சரியை முதனான்கு சாதனங்கள் செய்தறியேன்
பெரியவர்கள் கூட்டுறவைப் பேணுகிலே னாயிடினும்
உரிய நினைமறவே னுள்ளம்வைத்துக் காத்தருள்வாய்
தரியலரை வென்றுவருஞ் சத்திவடி வேலவனே. 16

கல்லாத வேடக் கயவர்வஞ்சக் கள்வரவ
ரெல்லாரு நின்பதத்தி லெய்வைத்தா யானவரிற்
பொல்லா தவனேசொற் பூரணமா யாண்டருள்வாய்
சல்லாப மஞ்ஞைவருஞ் சத்திவடி வேலவனே 17

முத்துமுடி மன்னவரு மூவாத நின்பதத்துப்
பத்திவைக்கா ராமாகிற் பாழ்படுவ ரென்றிந்நாள்
அத்திறங்கண் டுன்னடியி லன்புகொண்டே னருள்செய்
தத்துவங்கட் கெட்டாத சத்திவடி வேலவனே. 18

பண்டனையே வெல்லுமொழிப் பாவைவள்ளி பங்காளா
கண்டனையே யென்றுயராங் கண்டும் பாராமுகமாக்
கொண்டனையே யென்றனக்குக் கூறுமொழி தேற்றுவரார்
சண்டனைவென் றேனுதவுஞ் சத்திவடி வேலவனே. 19

உருவா யதுவில்தா யோங்குபர மானந்தக்
குருவாய் திருமங்கைக் கோவாய் மலரினுள
மருவாய் நிறைகடப்ப மார்பா வளர்நிதியந்
தருவா யிதுதருவாய் சத்திவடி வேலவனே. 20

சூலை வயிற்றுவலி தொண்டைவலி சொல்லிடுங்கா
மாலைவலி யெப்பிணியும் வாராமற் காத்தருள்வாய்
சோலைவள மங்கைநகர்ச் சொன்ன கிரியிலன்ன
சாலைவளங் காணவந்த சத்திவடி வேலவனே. 21

எத்திசையுங் கொண்டாட வென்றான்று நின்னடியே
பத்திசெயுந் தொண்டர்கடம் பாதம் பணியவருள்
துத்திய விற்றுயிலுஞ் சுந்தரமா றன்மருகா
சத்தி யருள்பாலா சத்திவடி வேலவனே. 22

சங்கரிக்கு வாவிபல சார்கயிலை மாமலைவாழ்
சங்கரிக்குப் பாலகனே தாசனெனைக் காத்தருள்வாய்
சங்கரிக்கு மாமருகா தானவர்கள் மூலமறச்
சங்கரிக்கு மைந்துபெற்ற சத்திவடி வேலவனே. 23

செம்பஞ்சுச் சீறடியுஞ் செங்கமல வாண்முகமும்
அம்பஞ்சும் வாள்விழியு மானவொரு தீமாது
கொம்பஞ் சுகமொழிக்குங் கூறுமருள் செய்துநீயே
தம்பஞ் சுகந்தருவாய் சத்திவடி வேலவனே.

நீண்ட பவந்தனையே நித்தநுஞ்செய் பாவியற்கும்
பூண்ட பயனளிக்கும் புண்ணியனீ யென்றுரைப்பார்
ஆண்டவனே யென்னளவி லஃதிலையோ தில்லைதனிற்
றாண்டவஞ்செய் வோன்சுதனே சத்திவடி வேலவனே. 25

நேர்ந்தாலு மின்னிருளை நேராமற் றீயநெறி
கூர்ந்தாலும் வஞ்சர்கட்புக் கொண்டாலு மஞ்ஞானமிக
வோர்ந்தாலு மோரா துலகறியத் தீநரகிற்
சார்ந்தாலு நின்னைவிடேன் சத்திவடி வேலவனே. 26

ஏரகஞ்செந் தூரா வினன்குடிப ரங்கிரிநற்
சீர்குன்று தோறாடற் செப்புபழ முதிர்சோலைப்
பாரகமுங் காத்த பரனே யெனைக்காப்பாய்
தாரகநீ யன்றியுண்டோ சத்திவடி வேலவனே. 27

காட்டானை சிங்கங் கரடிபுலி பன்றிகளை
நாட்டா ரடக்கியுற நானென் மனதடக்க
மாட்டாம னிற்கும் வகையென்கொ லன்னதற்குன்
றாட்டா மரையருடா சத்திவடி வேலவனே. 28

கொஞ்சி விளையாடுங் குழந்தைகளைப் பெற்றீடுந்தாய்
கெஞ்சிமருந் தூட்டிக் கிளர்நோ வகற்றுதல்போல்
அஞ்சி மெலிவுமெனை யன்புடனே காக்கவந்த
சஞ்சீவி யாயொளிருஞ் சத்திவடி வேலவனே. 29

மஞ்சரிக்கு மாமருகா வள்ளிக்கும் விண்வளருங்
குஞ்சரிக்கும் வாய்த்த கொழுநனே வந்தருள்செய்
மஞ்சரிக்குட் டேன்வாழ் வயல்வளர்க்கு மங்கைநகர்ச்
சஞ்சரிக்குஞ் சொன்னகிரிச் சத்திவடி வேலவனே. 30

## வாழி.

வாழிதிரு மங்கைநகர் வாழியொளிர் சொன்னகிரி
வாழிவடி வேலவன்பேர் வாழியவன் சீர்பாதம்
வாழிதிருத் தொண்டர்தினம் வாழியொரு நாலுமறை
வாழி தமிழ்ப் பாமாலை வாழிநலம் வாழியதே.

சுபம். சுபம். சுபம்.

முற்றிற்று.

THE MADU TAMIL SANGAM

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.



சொன்னகிரிச்சத்திவடிவேலவன்

# பஞ்சரத்னத் திருப்புகழ்.

கணபதி துதி.

நேரிசை வெண்பா.

பொன்வாழ் திருமங்கை பூத்தருளுந் தங்கமலை
மின்வாழ் வடிவேலன் மீதுதமி—ழின்வாழ்வார்
நத்துவிஞ்சு செஞ்சொலைந்தி ரத்தினத்தி ருப்புகழின்
பத்தியுற முன்னவகண் பார்.

## குழிப்பு.

தந்த தனதன தன்ன தனதன
தந்த தனதன தன்ன தனதன
தந்த தனதன தன்ன தனதன-தனதான,

திங்கள் முகமொளி ரன்ன நடைவிழி
யம்பு சுரிகுழ றுன்னு மிருணகில்
செம்பு வளையிடை மன்னு வகிரிழை—யெனரேரு

திண்டு முரடிக டம்மை யனுதினு
முங்க ருதிவரு சின்ன வறிவனின்
செம்பொன் மலரடி யுன்ன வரமது—தருவாயே.

துங்க வசுரர்கண் முன்ன மெதிர்பொர
வென்ற திடவயின் மன்ன மணமிகு
தொங்க லணிபுய வண்ண சிவனுமை-தருபாலா.

தொண்டு புரிபவ ரின்னல் பிணியற
வந்த குகபிர சன்ன வறுமுக
சுந்த ரகுமர கந்த பரவர—வுரவோனே.

தங்கை யுரைகளை யுள்ள மதுகொடு
வந்து கொடுவினை கொள்ளு நிசிசரன்
றங்கு புரிதனி லண்ணி யொருகணை—யதனாலே.

சண்ட னவனுயிர் தென்னு லகினுற
வுஞ்செய் கருமுகி லன்ன வடிவுள
தண்டு ளபமணி கண்ண னரிதிரு—மருகோனே.

சங்கம் விளைவுறு செந்நெல் வளமொடு
பொங்கு நிறைசுவை கன்னல் திரிகனி
தங்கி யளகையி தென்ன மதிதல—மடியார்கள்.

சம்பு சிவசிவ வென்ன வுரைதிரு
மங்கை நகரொளிர் சொன்ன கிரிவளர்
சந்த மிலகுறு புள்ளி மயில்வரு—பெருமாளே.

தந்ததனத் தானதனத் தனதான.

பொங்குதமிழ்க் காதிமறைப் பொருளாலும்
புங்கவனக் காவின்மணத் தலராலுந்
தங்குதிருப் பூதிமணிச் செயலாலுஞ்
சந்ததமுற் றொடாழவெற் கருள்வாயே
மங்கைநகர்க் காகுநிதிப் பெருவாழ்வே
வந்தசுரர்க் காரமுதத் தெளிதேனே
தங்கமலைக் கோவிலகத் துறுவோனே
சம்புதனக் கோதுமனுப் பெருமாளே.

தத்தத் தனதன தந்தத் தனதன
தத்தத் தனதன தந்தத் தனதன
தத்தத் தனதன தந்தத் தனதன—தனதான.

பட்டப் பகல்விழி வண்டைச் செருகியர்
இக்குக் கிளைமொழி வண்டக் கணிகையர்
பட்டுப் புடவையின் முந்திச் சரிகையர்—தெருவூடே.

பச்சைப் பசலையர் சொந்தப் பொருள்களை
யெத்திப் பறிமுதல் விஞ்சப் புரிபவர்
பற்றற் றகவிதழ் கொஞ்சிக் குலவுவ—ருரையாலே.

கட்டப் படவிடு வஞ்சத் தரிவையர்
மெட்டிப் பதவொலி பொங்கக் கடுநடை
கற்றுப் பழகியர் தந்தக் குவிதன—விளமாதர்.

கட்டித் தழுவுவர் பந்தக் கொடுமயல்
விட்டுக் குகநின தந்தப் பதமலர்
கட்குத் துதிபல வுந்தப் பலபொரு—டருவாயே.

துட்டப் பலபடை பம்பப் பொருமுனை
வட்டத் துறுபொழு தந்திப் பிறைமுடி
சுத்தச் சிவனணி கொன்றைக் கணியுற—வதனாலே.

சுற்றத் தபிமனு பொன்றக் கடிதினில்
நத்திற் கடுவொலி துன்றச் செயுமரி
அத்திப் பணியணி விண்டுக் கொருதிரு—மருகோனே.

எட்டுத் திசையுநி ரம்பிக் ககனமு
முட்டிச் செலுபுகழ் கொண்டுத் தமமிகு
மிச்சைப் பதிவளர் மங்கைப் பதிவள—முறநாளும்.

இட்டத் துடனொளிர் தங்கக் கிரிவரு
முத்திப் பரகுக சந்தக் கடவுள
நிட்டுப் பலமலர் வந்தித் துறவருள்—பெருமாளே. 3

தன்னதன தத்ததன
தன்னதன தத்ததன
தன்னதன தத்ததன—தனதான.

வன்னநகை பொற்றரள
மின்னமிடை பின்னுசடை
மன்னுகலை முற்றுமதி—முகமாதர்

வண்ணவடி வுற்றமட
வன்னநடை கற்றவர்கள்
வல்லபழி பெற்றவர்க—ளதிகூதர்.

பொன்னைவிலை பெற்றநிறை
தன்னையகல் விட்டவர்கள்
புன்மைநிறை கெட்டவர்க—ளுறவாலே,

புல்லறிவு மிக்கபிழை
யுள்ளடிய னித்தகின
பொன்னடிதொ ழக்கிருபை—யருள்வாயே.

துன்னுசின முற்றமுனி
தன்னொடுந டத்தளவில்
தொல்லைவினை யற்றுவரு—மொருமாது,

துள்ளிவிழ விட்டுகணை
செல்லுமமை யத்துரிய
சொல்லியுரு வைக்கொடரி—மருகோனே,

அன்னல்மொழி மிக்ககுற
வன்னையிட முற்றவளர்
கள்ளவிழ்க டப்பமல—ரணிவோனே.

கண்ணுதல ரற்குமர
சொன்னகிரி யிற்பரவு
கண்ணியர்த மக்கருள்செய்—பெருமானே.






தத்தன தனதன
தத்தன தனதன
தத்தன தனதன—தனதான.

சித்தச னுறுகலை
முற்றிலு நிறைபவர்
திக்குளர் மயலினில்—விழவாதே.
செப்புவ ரிளைஞர்கள்
வைத்துள பலபொருள்
தெத்திய வரைதெரு—விடுமாதர்.
புத்தியில் முரடிகள்
சத்தியி லசடிகள்
புற்றுறு வரவென—வருவோர்கள்.
புக்கிய குழுவினை
நத்திய சிறியனின்
புத்தடி மலர்தொழ—நினைவாயே.
அத்தின புரிமன
னுக்கிளை யவன்மன
தக்கிர மதுகொடு—நிறைமாதின்,
அத்துகில் கவர்வுற
வொக்கலில் நிறைகலை
யப்பொழு தருளரி—மருகோனே.
தொத்துறு மலர்வன
மெச்சிடு பலபொழில்
சொற்றிடு விரிதட—மிவையாவுந்.
தொக்குறு வளமிகு
பொற்கிரி தனில்வளர்
சுத்தவ ரதகுக—பெருமானே. 5

சுபம். சுபம். சுபம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.



# சொன்னகிரிக் கதிரேசன்மீது

# காவடிச்சிந்து.

## ஆனந்தக்களிப்பு.

பொன்மலையில் மேவுகதி ரேசன்-அடியர்
போற்றுதுதி யேற்றுமிடி மாற்றுவிசு வாசன்
தன்மமிக வோங்குபிர காசன்-சூரர்
தங்கள்குல மங்கவயில் தங்குகர நேசன்.

வள்ளிதினை மாவிலுதி மோகன்-நீப
மாலையணி கோலமுறு பாலபுய வாகன்
புள்ளிமயில் வந்தருள்வி வேகன்-எனது
புந்திதனி லந்தியொடு சந்திவளர் யூகன்.

பூத்ததிரு மங்கைநகர்ப் பதியான்-தொண்டர்
புன்பிழையில் வன்புகொடு நெஞ்சமது பதியான்
சேத்ததெய்வ யானைகுணை பதியான்-ககனத்
தேவர்துய ரேகவரு சேனையதி பதியான்.

மூன்றுமல மாறுபகை யோட-வந்த
முருகனிரு பதமலரி னதியதுதி பாடத்
தோன்றுபொருள் யாவும்வந்து கூட-வளருந்
தும்பிமுக னிணையடியை நம்பிடுவ னீட.

## தலச்சிறப்பு.

புள்ளிக்கலபமயிற்பாகன் என்றமெட்டு.

சொன்ன மலையில்வளர் வாசன் வேதந்
தோத்திரஞ் செய்கதி ரேசன் துதி
சொல்லுமடியர்வினை வெல்லுமதிகவிச
வாசன்- பிரகாசன்.

வன்ன மயில்வருமுல் லாசன் வள்ளி
மங்கைதெய் வானைக்கு நேசன் திரு
மங்கைப் பதியின்வளம் பொங்கமுடன் மொழிவேன்
மாதே- கேளிப்-போதே.

நான்கு வருணங்க ளோங்கும் அவர்
நன்னெறி வாழுமெய்ப் பாங்கும் அவை
நாளும் வளரவா னீளுஞ் சிவாலய
நண்ணும்- திசைக்-கண்ணும்.

வான மளாவும்பொன் மாடம் அதில்
மன்னுங் கொடியசைவி சேடம் சொர்க்க
வாசத் தலமதைக்கை நேசத் தழைப்பதொக்கு
மானே- செழுந்-தேனே.

பத்திக் குரியதொண்டர் கூட்டம் கூடிப்
பண்டமிழ் பாடுங்கொண் டாட்டம் உயர்
பாவின் மகளுமய லுவிற் புகுந்திடுவள்
பார்த்து- உடல்-வேர்த்து.

சத்திக் குமரகுரு நாதன் மணித்
தண்டை விளங்கும் பொற் பாதன் அருள்
தன்னைத் துதிப்பரொலி துன்னிக் கடலொலியைத்
தாண்டு- மென்னல்-வேண்டும்.

வண்ண மணிக்கடையி லட்சம் உற்று
வாழுஞ் சரக்குபல மிச்சம் சொல்லின்
மாலின் வயிறதனைப் போது மெனவழுத்து
வாரே- வெகு-பேரே.

விண்ணி லருந்ததியை நேர்வார் பெண்கள்
மேன்மைக் கணவர்வழி யோர்வார் தலந்
விளங்கும் வளந்தமிழை யுளங்கொள் முனிபுரைக்கு
மேலே- யெனு- நூலே.

## தீர்த்தச்சிறப்பு.

செந்தின் மாநகர்வாழ் கந்த நாதனிரு என்றமெட்டு.

சொன்ன மாமலையின் மன்னு வேலனருட்
டுய்யதான வெள்ளமே யென்று
மெய்யைமேவு முள்ளமே விலைத்;
தோகைமாதர் கள்ளமே யென்னச்
சொல்ல நேரும் வாவி நல்ல தேசினிளந்
தொகையுநூறு வெள்ளமே.

அன்ன மேவிவள மின்னு தாமரையி
லாதரத் தேனுறுந் தோற்றமே முகசு
மாதர் விழிக்கதி யேற்றமே மது
வாகு மவருரை மாற்றமே கதிக்;
கருமை யானவரைக் கருமை மேகங்கிழித்
ததனுள் மீளுந் தேற்றமே.

வானம் வாழுமார் மாத ரோடுமிதில்
வந்துமுழ்கி யோங்குவார் சுக
மன்னியின்பந் தேங்குவார் வந்த
வல்லநோவி னீங்குவார் இளை
மைந்த ராதிகளை யெந்த நாளுமிக
வளமு மீறத் தாங்குவார்.

தேனை வெல்லுமொழி மானை யொல்லும்விழித்
தேவி மறைமுனி வோருமே இந்தப்
பூவி லரசுசெய் வாருமே மற்றைச்
சீருள யாவரு நேருமே வேலன்
செய்ய பாதங்களைத் துய்ய மூழ்கிமலந்
தீர்ந்து பெறுவரெச் சீருமே.

## மூர்த்திச்சிறப்பு.

வன்னத் தினைமாவைத் தெள்ளியே யென்றமெட்டு.

தங்கக் கிரியில்வளர் சாமியே யுயர்
தருமம் புரியுஞ்சிவ காமியே பெற்றுத்
தங்குங் கதிர்காமப் பூமியே யுற்ற
சாருநீடொளி கூருமாவயி லேறுமாமுக நாதனேயிரு
தாளிணை தாவென நேமியே தொழுந்
தற்பரா நற்சுக நேமியே.

எங்கட் கெனப் புவியோர் கூடியே பல
இன்னிசை ராகங்கள் பாடியே பொற்பை
யென்றும் வலம்வந்து தேடியே பதம்
ஏத்துவார்பிணி மாற்றியேநல மேற்றியேவரு மூர்த்திவேலருள்
இன்னவென் றேசொற்கள் நாடியே சொல்ல
வேந்திழை யேயவை கோடியே.

தெள்ளிய வேதங்கள் நாட்டமே கொண்டு
தேடினுங் கிட்டாத தேட்டமே அன்பர்
சிந்தைக் குவந்தகொண் டாட்டமே கொடிச்
சேவலாவடி வேலவா முருகேசவா முனி தேசிகா வெனச்
செப்பிப் பணிவோர்கள் கூட்டமே எண்ணச்
சேயிழை யேமிக்க நீட்டமே.

வள்ளிக் குவந்தவடி வேலனே மலை
வல்லிக் கினியசிறு பாலனே தேவர்
வாழும் பதிகொடுத்த சீலனே யாளு
வாருக்குகும ராபராஜெய வீரசூர்குல காலனேகலி
மாற்றிடென் பார்க்கனு கூலனே யென்னை
வாழ்வித் தருளும்பரி பாலனே.

செய்ய வடிவேற்சொ ரூபனே புயந்
திகழு மணமிகுந்த நீபனே பகை
சேரு முளத்தர்மனஸ் தாபனே வருந்
தீய்பாதக மாயவேல்விடு தீரனேயிரு மாதர் மேவிய
சேந்த னுலகுக்கொரு பூபனே நம்புஞ்
சீரிய ருளக்கோவிற் றீபனே.

வையம் புகழும்வெகு தாரனே திரு
மங்கைப் பதிபுரக்குந் தீரனே சித்த
மாசி லடியர்க் குபகாரனே இந்த
மாநிலந்தனி லேவிரிந்திடு பூமிகும்பல சாவளம் பெறு
வண்ணக் கனககிரி வீரனே யென்மூண்
வந்து பொருளருள்ம யூரனே.

## மலைவளச்சிறப்பு

தெள்ளுதமி ழுக்குதவு சீலன் என்றமெட்டு.

சொல்லுங்கதி ரேசன்வடி வேலன் பணி
தொண்டர்களுக் கென்றுமனு கூலன் வளர்
சொன்னமலை மேவுவளந் தன்னைவெகு நன்னயமாய்ச்
சொல்வேன்-றுயர் -வெல்வேன்.

வெல்லமதை வெல்லுமொழித் திருவே விண்ணின்
மேனகையு மெச்சுமெழி லுருவே நல்ல
விற்பனம தாகமன தற்புடனே கேட்டருள்வாய்
மின்னே-யுயர்-பொன்னே.

தங்கமலை தன்னொளிவிண் டாவி தேவர்
தங்குமிடந் தன்னினன்முய் மேவி அதைத்
தன்மயம தாக்கவுயர் பொன்னுலக மென்றபெயர்
தயங்கும்-என்று-மியங்கும்.

பஞ்சதரு மாமலர்கள் தாவுங் கிளை
பற்பலவு முன்னதத்தின் மேவும் அன்ன
புான்மையடி யார்கடொழு மேன்மைமிக ராகுமொழிப்
பண்ணே-யென்றன்-கண்ணே.

மஞ்சுவிண்ணில் வாவி வரு மிரவி இந்த
மாமலையின் பேரொளியை விரவி நேரில்
வந்திடவொண் ணுமனித முந்துவலம் வந்திடுவான்
மானே-செழுந்-தேனே.

சந்தனம ரங்கள்பல நீளும் அவை
தாங்குமந்த ரத்தையெந்த நாளும் என்னத்
தக்கவர்கள் பேணியுரை மிக்கபல கூறுவர்கள்
தாமே-யுண்மை-யாமே.

கந்தன்கதி ரேசனரி மருகன் மலர்க்
கைகள்பனி ரண்டுகொண்ட முருகன் தங்குங்
கனகக் கிரியின்வளம் பனக னுரைக்குமடங்
காதே-மட-மாதே.

## கோவிற்சிறப்பு.

சென்னிகுள நகர்வாசன் என்றமெட்டு.

வன்ன மயிற்குயில் வாழுங் கந்த
மாமலர்ச் சோலைகள் சூழுந் தினம்
மதுரக்கனி மதுவைப்பெரு மழையிற்றருவளமுற்றிட
மன்னு-மிக-மின்னும்.

சொன்ன மலைக்கதி ரேசன் அன்பின்
மொண்ட ருளத்தினில் வாசன் தங்குந்
துதிகோவிலின் வளமேசொல மதிநேர்முக ரதிகேள்நலந்
தோன்று-மெந்த-ஞான்றும்.

கோவிலின் மாமதிள் மேலே துயில்
கொள்ளுங் கருநிற மாலே தங்குங்
கோபுரத்தினி னீடுபொற்குட மானதெற்பக லோகமுட்படக்
குலவு-மெங்கு-நிலவும்.

தாவிலாச் சந்நிதி முன்பு தொழச்
சார்ந்திடும் பத்தர்க ளன்பு கொண்டு
சாலவோடு நீடுவாழ்கொடி மாமரந்துணி லேயமர்ந்தொளி
தயங்குந்-திங்க-ளியங்கும்.

கெற்பக் கிரகவி மானம் முதற்
கேள்கிளர் மண்டபத் தானம் உற்ற
கேடிலாவொளி சாடவேயத னேரிலேஸர வோடுவான்வெயில்
கேளே- ஓயி-லாளே.

பொற்புக் குரியபொற் கோவில் வளம்
பூத்திடும் பூசுரர் நாவில் வேதப்
பொலிவுஞ்சிவ சிவவென்னு தினமன்பர்க ளொலியுஞ்சுவை
பொருந்து ம்-விண் ணுங்-திருந்தும்.

பாற்குடங் கோடியிற் கோடி கொண்டு
பத்தர்கள் சாமியை நாடி நின்று
பணியற்புத மகிமைக்கிணை யிதெனச்சொல விழிகட்செவி
பயந்தான்—பில நயந்தான்.

நாற்றிசை யோர்களும் வந்து வேலன்
நற்புகழ்க் காவடிச் சிந்து பாடி
நாளும்பெரு வாழ்வுங்கிளை யாவும்பெறு வாரின்புற
நாமே-சொல்லு-வோமே.

## வள்ளியம்மை திருமணம்.

பொன்னுலவு சென்னிகுளம் என்றமெட்டு.

அன்னநடை மின்னலிடை கன்னலிரச மென்னுமொழி
யம்புயமு கம்பெறுவிற் பன்னியே வள்ளி
யம்மைதிரு மங்களங்கேள் கன்னியே சொல்ல
ஆதிநாளினி லேயொர்மாமுனி நீதிமாதவ மேபுரிந்திடு
மப்பொழுது பொற்பிணைமுன் மன்னியே செல்ல
அன்னவர தன்னமுகை யுன்னியே.

துன்னுமயல் கொள்ளவது நன்னயச்சூல் கொண்டுமூலந்
தோண்டுகுழி தன்னிலுமோர் தீன்றதே வள்ளி
தோன்றினள்மெய்த் தேசுமிகக் கான்றதே அன்று
சூழவேடர்க ளிராஜநம்பிகண் ணேரிலேயுற வாவல்விஞ்சிச்
சுந்தரநன் மாதுநமக் கேன்றதே என்னச்
சிந்தைமகிழ் கொண்டுசென்று ளன்றதே.

மாமனையிற் கொண்டுதன்பெண் ணுவல்கொள்ள வேகொடுக்க
வாங்கிவளர்த் தாளவளு மோங்கியே யுறப்
பூந்தினைக்குக் காவல்வைத்தார் பாங்கியே காக்கும்
மாதினை மதை நேரிறை தன் மேவும்வாள்விழி யாலளந்துநன்
மங்கையிவட் காகும்வேலைத் தாங்கியே யந்த
மார்க்கமதைச் செய்வேனென்று நீங்கியே.

காமனல்லல் தீர்த்தவடி வேன்முருகன் பாலணைந்து
கன்னிவள்ளி பேரழகைக் கூறினன் கந்தன்
காதுகளிற் கேட்டுமையல் மீறினன் கருங்
கச்சையும்பத ரட்சையுந்தனு விச்சையுங்கணை மிச்சமுங்கொடு
கானவேட னுகவுடல் மாறினன் வள்ளி
கண்ணெதிரே செல்லமனந் தேறினன்.

வேறு.

வள்ளிவள்ளி வள்ளியென்று நாடியே தினை
மன்னுபுனந் தன்னிறசென்று தேடியே கண்டு
மாதரசே தேன்மொழியே காரிகையே வேடர்குலம்
வந்தசெழும பூங்கொடியே நோக்குவாய் விழி
மானேயென்றன் றூபமதைப் போக்குவாய்.

எள்ளியெனைத் தள்ளிவிடா தேற்றுவாய் கரை
யேந்திழையே யின்பவுரை யூற்றுவாய் நீயும்
இந்தவனந் தன்னில்வந்த தெந்தவிதஞ் சுந்தரியே.
யார்மகளுன் னூர்பெயரைக் கூறுவாய் குலம்
யாதெனக்குச் சொல்லிமனந் தேறுவாய்

நின்றுவேல னிவ்வுரைக ளாடவே வேடர்
நீளநம்பி ராஜன்வந்து கூடவே உடன்
நேர்த்திவேங்கை மாமரமாய்ப் பூத்திருக்கக் கண்டவர்கள்.
நெஞ்சமஞ்சி வள்ளிதனைக் கேட்கவே இதன்
நேர்மைதெரி யாதெனுஞ்சொற் கோர்க்கவே.

அன்றுவேடர் மாமரத்தைத் தோண்டவே செல்ல
அஞ்சிநம்பி கூடாதென்று வேண்டவே யுற்ற
தானதினை மாவுந்தேனு மானவள்ளி கையிற் கொடுத்
தப்பொழுதே யாவர்களு மேகினார் வேங்கை
யாயவேலன் வேடன்பின்னு மாகினான்.

மாமயிலே யென்றனையாட் கொள்ளுவாய் கொவ்வை
வாயைத்திறந் தோர்சொல்லுரை விள்ளுவாய் மிகு
வையமதிற் றையலர்கள் தெய்வமென வந்ததிரு
மாதுனக்கு வன்கண்மையு மாகுமோ உரை
வாழ்த்திடிற்செவ் வாயுனக்கு நோகுமோ.

கோமளமி லாதகரு வேடனே வென்முன்
கூசாதுரை பேசுங்குண கேடனே நெஞ்சங்
கொஞ்சமுமஞ் சாமலிங்கு விஞ்சமொழி பேசுகிறாய்
கொல்லர்தெரு வூசிவிலை செல்லுமோ நீயுங்
கூறுமொழி கூறுவது மொல்லுமோ.

இந்துமுக மங்கையெனைப் பேணுவாய் பேணில்
என்றுமுவந் தின்பநலம் பூணுவாய் விட்டு
இவ்விதஞ்சொல் வாயெனிலியா னெவ்விதமுய் வேனடிமின்
னேயொளிர்பொன் னேமணியே நீலமே யதந்
தித்தருண மேற்றநல்ல காலமே.

வந்துபழிச் சொல்லைச்சொல்லும் காதகா சொன்ன
வார்த்தையெனக் கேற்காதடா பாதகா இந்த
மட்டில்விடு நட்டணையைக் கிட்டிடுவர் தந்தைவேடர்
வம்புவரு மென்றுமங்கை பேசவே யவர்
வந்தார்கொடிப் போதில்மணம் வீசவே.

வேறு.

ஆறுமுக வடிவேலவனே யென்றமெட்டு.

கூறியநம்பியு ரோடவேலவன் கொண்டு சிவவேடம் பையிற்
கொள்ளும்விபூதியை யள்ளியளித்திடக் கூர்ந்தனன் சந்தோடம்

மீதிபழைப்புடன் வேதச்சிவனடி மேவிய சித்தமுற்றீர் என்ன
வேண்டிவனத்திலே ஈாண்டியாய்த் தோன்றினீர் விள்ளுங்கலைகள் கற்றீர்.

நம்பியே நின்வரை வாழ்குமரிச்சுனை நம்பியே மூழ்கவந்தேன் இந்த
நானிலந்தன்னிற்செங் கோலுடன்வாழுதி ராஜனே யாசிதந்தேன்
நம்பனடியரே நம்புதல்விக்கொரு நல்லதுணையாக இரும்
நாதனேயென்றுதன் மாதிடந்தேன்மாவை நல்கி யவனேக.

ஏகியபின்சிவ வேடரும்வள்ளியி டம்பசி மிக்கவென்றே சொல்ல
இன்புடன்றேன்றினை மாவுங்கொடுத்திட வேற்றவையன்று தின்றே
தாகமெடுக்கின்றதென்செய்வேன்மங்கையே தண்ணீர்தருவாயே நல்ல
தண்ணீரில்லாவிடி னீர்ச்சுனைகாட்டுவாய் தக்க தருவாயே.

ஈசனடியவரே கொஞ்சஞ்சென்றிடி னீர்ஞ்சுனை மெத்தவுண்டு அதி
லேகுளிர்நீரருந் திக்களைப்பாருமென் றென்றாள் மகிழ்வுகொண்டு
ஆசிலாவம்மையே சென்னெறிநோக்கிலேனுதர வாகவந்தால் வரும்
அந்தத்தருமமுண்டாகுநினக்கென்ன ஆண்டியுஞ் சொன்னார்தந்தால்

வாருமென்றேதண்ணீர்த் தாவளங்காட்டிட வாரிக்கை யாற்பருகி இள
மங்கையேசென்றது தாகம்போகத்தட மாதெதென்னுருநகி
நீருஞ்சிவனடி யாரிற்கிழவராய் நிற்கிறீர் மெல்லமெல்ல வந்து
நிட்டூரநட்டணைக்கேலிகள்செய்வது நேர்த்தியோ நல்லதல்ல.

காட்டுப்பசுபுலித் தோலுமூடிச்செலுங் காரணம் போலநீரும் இங்கு
காட்டுகின்றீர்கடைசெல்லுமோவென்னிடங்காணுநீர்போரும்போரும்
நாட்டிற்றினைக்கதிர்க் கொல்லையைக்காத்திட நான்செல்வே னென்ன
வன்று வள்ளி
நாயகி சென்றிட வேலவனின்னையே நான்மணஞ் செய்வே னென்று.

வேறு.

பாதிராத்திரி வேளையில் என்றமெட்டு.

ஆதிமூர்த்திநின் சேவடிதுணை யன்றிவேறில்லை நாளும் உயர்
அற்புதா வென்னை யாளும் சொல்லை

யன்புடனின்று நேளும் இங்கு
அண்ணலேவந்து வள்ளியைமாமண மடியனுக் கேசெய்துமீளும்.

நீதியேயென வேலவன்கூவிய நோக்கயமுகன் வந்து வள்ளி
நேரினிற் றேன்றிட நொந்து சாமி
நேயக் கிழவரே முந்து யானை
நேர்ந்ததித்துன்பந்தீர்ந்திடி னும்மனநேர்மைபோற் செய்வன்மகிழ்ந்து

என்றுவேல னிடைதனைக் கட்டின னேவேட மங்கை நன்மாது இன்ப
மெய்திய கந்தனைப் போதுமுன்னேன்
இன்னடி போற்றிநும் மேது வாக
இந்தநேரிழை கைவசப்பட்டன ளின்றெனிற் செய்வளேவாது.

நன்றுநீர்செலு மென்றிடமுன்னவ னுதன்மறைந்தன னன்று வள்ளி
நாயகி வேலவ னின்று சோலை
நாடியே கூடிடச் சென்று அந்த
நாளிலேமயி லேறியேகாட்சியு நல்கினன் வள்ளிக்கேயன்று.


காட்சிதந்தருள் மாமுருகன்றனைக் காணுமல் வாடிமருண்டு வள்ளி
கானெலாந் தேடியே வண்டு காங்
கக்க மெலிவது கொண்டு தேனுங்
காயுமாவுங் கனிகளுமுண்ணக் கருத்தின்றி யுற்றுள்பூச்செண்டு.

தாட்சியைக்கண்டதோழியர்சிற்றூர்க்குத்தாயிடங்கூட்டிச்சென்றுரே
இவள்தன்மைமை நோக்கினள் நேரே தெய்வஞ்
சார்ந்த குணமிதன் சீரே யென்ன
தான்செய்வோமென்வெண்ணித்துயின்றனர்சாற்றிநிகள்ளிருட்பாரே.

வேறு

கண்ணுயிரம் படைத்து என்ற மெட்டு.

நன்னில் வடிவேற்குகன் வள்ளிதனைமணப்ப
நலமிக வத்தல மதனி லுறப்பல நங்கையார் கண்டு
நறவுறுதொத்தும லரைநிகர் வித்தகச் செங்கையாய்



வள்ளக் குபத்தாள்துயில் கொள்ளு மறையிற்பல
மணிதர்மி குத்துள ரதனி லுறச்செலல் வாட்டமே யாங்கள்
மனமகி ழக்கொடு வருவ மெனச்சொல நாட்டமே

தூங்கு மறையிலுயி லோங்குங் குகன்வரவைத்
துரிதமி கச்சொல வவளும்வ ரத்தருச் சோலையே சென்று
தொலையின் மதக்கல வியினின் மிகுத்தனர்வாலையே

ஆங்கு மகளைக்காணு தேங்கிநம் பியுவேட
ரனைவரு மப்பொழு திவர்களை யுற்றன ரார்க்கவே வேலன்
அவர்களை வீழ்த்தின னெடிதனி லண்டர்கள் பார்க்கவே.

வீழ்ந்த வவர்களுட லார்ந்த வுயிர்வரவே
விளைவுசெய் தித்தனர்முனிவர்தொ ழுத்தகுவேலனேதொண்டர்
மிகுபொருள் பெற்றிட வரம தனைத்தரு சீலனே

வாழ்ந்த வரசனம்பி னோர்ந்த கிளைஞருடன்
மயிலவ னற்புத மலரையு ளத்துவ ணங்கியே ஊர்க்கு
மதுரமி குத்தசொன் மகளொடழைத்துமிணங்கியே

உற்றோருஞ் சூழ்ந்துநிறை மற்றோரு மின்பமுற
வுயர்சுப லக்கின வாமக ளைக்குக னோரமே வைத்து
ஒளிரவி யற்றினன் மணமதை நம்பியந் நேரமே.

வற்று நிறைவளப்பம் பெற் றதிருத்தணிகை
மனமகி ழற்புத மகிமையொ டுற்றனர் வாழியே இன
மகியொ டிதைப்படி யடியர் துதித்தவர் வாழியே

சுபம் சுபம். சுபம்.

முற்றிற்று.

உ

முருகன் துணை.

# விளம்பரம்.

——:(O):——

இதனால் சகலகனதனவான்களுக்குத் தெரிவிப்பது
யாதெனில்:—

கோவிற் பட்டி யென்னுந் திருமங்கைமாநகரிற் சொர்ணகி
ரியில், ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாய்ச் சத்திவடிவேற்
சொரூபமாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீகதிரேசப்பெருமான் அபிடே
கத்திற்கு, இதரகலப்புற்ற பன்னீர்களை வாங்கி உபயோகிப்பது மிகுந்
தபாவம். என்பதைக்கருதி நயம் சுத்தமான,

1. அபிடேகப் பன்னீர்,
2. சவ்வாது.
3. புனுகு.
4. சந்தனாதித்தயிலம்.

இவைகளை ஷை மலையிலேயே, மாணிக்கப்பிள்ளையார் கோவி
லுக்குத் தென்புறமிருக்கிற கதிரேசப்பெருமான் பண்டசாலையில்
ஒப்பந்தஞ்செய்திருப்பதால், ஷை சாமான்களையே வாங்கி ஸ்ரீகதிரே
சப்பெருமான் அபிடேகத்திற்குக் கொடுக்கவேண்டும். இதரபன்னீ
களை அபிடேகத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதை
தவிர ஷை கதிரேசப்பெருமான் கோவிலுக்குவரும் மகாஜன
ளின் சௌகரியத்தைக்கருதி, சகல அபிடேகச்சாம
வியாபாரஞ்செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது.

ஆகையால் சகலசாமான்களும் ஷை கதிரேசப்
சாலையிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

அ. சி. இராமசாமிசெ

ஷை கோவில் அக்தார்,

கோவிற்பட்டி.